திருவள்ளுவர் ஆண்டு 2043

பிப்ரவரி - 2012

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 56
பகுதி : 4

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச்சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

62வது குடியரசு தினத்தன்று கல்லூரிச் செயலாளர்
திரு. இரா. குருசாமி அவர்கள் தேசியக் கொடியேற்றினார்.
உடன் சங்கச் செயலாளர் திரு. இரா. அழகுமலை,
கல்லூரி முதல்வர் மற்றும் அலுவலர்கள், மாணவர்கள்.

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 56 திங்கள் இதழ்

பகுதி : 4 திருவள்ளுவர் ஆண்டு 2043

பிப்ரவரி 2012

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள் கட்டணம்	ரூ. 1000	
புரவலர் கட்டணம்	ரூ. 5000	ரூ. 6000
தனி இதழ்க் கட்டணம்	ரூ. 10	

முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

ஆசிரியர்

இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

பொருளடக்கம்

தொல் பொருளதிகாரம் பாடப்பிரிவின் தேவை	பேரா. முனைவர் இ.கி. இராமசாமி	4
திருக்குறள் ஓர் அரிய செல்வம்	ஆறுவிரல் ஐம்பொறி	9
அரங்கனார், உ.வே.சா. குறுந்தொகை உரைகளில் இலக்கண மேற்கோள்கள்	பெ. பேபி	12
வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணத் தமிழ்த்திறன்	புலவர் தா. குருசாமிதேசிகர்	18
எஸ். ராமகிருஷ்ணனின் பாரதக்கதை மீட்டுருவாக்கம்	அ. ரஜினி	25
மரம்	சி. பாண்டுரங்கன்	29
மக்கள் வழக்கிலே மொழி வாழும் – வரம்பிட்டு வளப்படுத்துவோம்.	பேராசிரியர் வெ. பெருமாள்சாமி	31

இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

திருவள்ளுவர் ஆண்டு 2043 தொகுதி 56, பகுதி நான்காம் இதழை, தங்கள் கைகளில் தவழவிடுவதில் பெருமை அடைகிறோம்.

பெரும் பேராசிரியர் முனைவர் இ.கி. இராமசாமி அவர்களின் "தொல்பொருளதிகார பாடப்பிரிவின் தேவை" என்னும் கட்டுரை, தொடர்ச்சியோடு இம்மாத இதழ் தொடங்குகிறது.

தொல், புறம் வெறும்போர் நிகழ்ச்சிகளை மட்டும் சுட்டாமல் மக்களின் கடமைகளையும் சுட்டுகிறது என்ற ஆசிரியரின் அழுத்தமான கருத்து பாராட்டுக்குரியது.

ஆறுவிரல் ஐம்பொறி அவர்களின் "திருக்குறள் ஓர் அரிய செல்வம்" என்னும் கருத்துக் குவியலைத் தொடர்ந்து மேற்கோள் என்ற சொல்லுக்கு - உதாரணம், சனி, போர்வை, முன்னோர் வழக்கு, மேன்மை என ஐந்து பொருள்கள் கூறப்பட்டுள்ளன என்று சிதம்பரம் பேபி அவர்கள், "அரங்கனார் உ.வே.ச. குறுந்தொகை உரைகளில் இலக்கண விளக்கம்" என்னும் கட்டுரை வழி சிறப்பாகக் கூறியுள்ளது பாராட்டுக்குரியது.

வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணத் தமிழ்த்திறனை இலக்கண, இலக்கியப் பொருள் நயம்பட முதுபெரும் புலவர் தா. குருசாமி தேசிகர் அவர்கள் வெளிப்படுத்தி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார்.

ஆய்வாளர் அ. ரஜினி அவர்கள் எஸ். இராமகிருஷ்ணன் பாரதக்கதை மீட்டுருவாக்கம் என்ற புதினத்தைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையை இம்மாத இதழை வளம் சேர்க்கக் கொடுத்துள்ளார். வளம் சேர்த்திருக்கிறாரா இல்லையா என்பதை வாசகர்கள்தான் தெரிவிக்க வேண்டும்.

ஆம்பூர் புலவர் சி. பாண்டுரங்கன் அவர்களின் மரம் பற்றிய கருத்துப் பெட்டகத்தோடு, மக்களின் மொழிவழக்கை எள்ளிப் புறம் தள்ளாமல் அவற்றையும் ஏற்று வளப்படுத்த வேண்டும் என்ற பேருள்ளத்தோடு பேராசிரியர் வே. பெருமாள் சாமி அவர்கள் தனது கருத்துக் கட்டுரையைத் தந்து இம்மாத இதழை நிறைவு செய்கிறார்.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

தொல் பொருளதிகாரம் பாடப்பிரிவின் தேவை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பேரா. முனைவர்
இ.கி. இராமசாமி

புலால் உண்ணும் பழக்கத்தினர்

1. கறிசோறு போட்டனர்
2. புட் சகுனம் பார்த்தனர்
3. கடவுள் வழிபாடு இருந்தது
4. மண முழவு ஒலித்தது
5. வெண்மையான நூலில் இலை, அருகம்புல் ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டிக் காப்பாக அணிவித்தனர்.

இவ்விரண்டு வதுவைச் சடங்குகளிலும் - திருமணச் சடங்குகளிலும் புரோகிதர் இல்லை; மந்திரம் இல்லை; தீ வலம் இல்லை; அம்மி மிதித்தல் இல்லை; அருந்ததி காட்டல் இல்லை; திருமணத்தில் தாலி பூட்டிய குறிப்பும் இல்லை (தாலி கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பின் வந்த வழக்கம்).

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப. (தொல். பொருள். 145)

ஐயர் என்பதற்குப் பிராமணர் என்று பொருள் கொள்ளுவது தவறு. ஐயர் என்பதற்கு உயர்ந்தோர், மூத்தோர், பெற்றோர், தலைவர் என்று பொருள். ஊர்ப்புறத்தில் 'ஐயா இருக்கிறார்களா?' என்றால் அப்பா இருக்கிறாரா? பெரியவர் இருக்கிறாரா? என்று பொருள்.

என் ஐ முன் நில்லன்மின்

என்றால் என் தலைவன்முன் நிற்காதீர் என்று பொருள். மேனாள் உற்ற செருவிற்கு இவள் தன் ஐ யானை எறிந்து களத் தொழிந்தனனே என்ற இடத்து ஐ - தமயனைக் குறிப்பதாகும். அது வர்ண சாதிப் பெயர் அன்று.

இந்த எளிய திருமண முறையினால் செலவு குறைந்துள்ளது. வரதட்சணை இல்லை. நகை, அணிமணி, சொத்து ஆகியன கொடுத்தல் இல்லை. திருமண மண்டபம், வீடியோ, நிழற்படம் இல்லை. இவை தேவையும் இல்லை. கணவன் மனைவிக்குள் பிணக்கு ஏற்பட்டால் இந்தப் பெரியவர்கள் வந்து உரிமையோடு தீர்த்து வைப்பர். புரோகிதர் வருவாரா? தட்சணை வாங்கி விட்டுப் போய்விடுவார், அவ்வளவே ! இன்று, சோதிடரைப் போய்ப் பார்த்து முறையிடவும் முடியாது. பெரியோரைத் தவிர, ஊடல் தீர்க்கும் வாயில்கள் இருந்தனர். அவர்கள் கணவன் மனைவியரிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வைத்திருந்தனர். அன்று மணமுறிவு (Divorce) என்ற பேச்சுக்கே இடமில்லை. மீண்டும் இணைந்தனர் (Re-Union), மறுமணம் (Re-Marriage) அறுத்துக் கட்டுதல் எதுவும் இல்லை. பொய், காதலித்தவரைத் தெரியாது என்றல்; வழு, ஒருத்தரைக் காதலித்து விட்டு மற்றொருவரை மணமுடித்தல் போன்ற குற்றங்கள் நிகழவில்லை.

புறம்

அகம் அல்லாதது புறம். 7 அகத்திணைப் பாகுபாடு போல 7 புறத்திணைப் பாகுபாடு பற்றித் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பன அவை. வெட்சித்திணை ஆநிரை பற்றிய போர். வஞ்சி நிலப்பகுதியைக் கவர்தல் பற்றிய போர். உழிஞை தலைநகர்க் கோட்டையை முற்றுகையிடல். தும்பை வீரம் மிக்கவர் யார்? என்பதை மெய்ப்பிக்கும் போர். காஞ்சி போரழிவால் ஏற்பட்ட இழப்பு, இரக்கவுணர்வு, நிலையாமை பற்றியது. பாடாண் வீரமும் புகழும் கொடையும் கருணையும் பாடுவது.

இயற்பெயர்

புறப்பாடல்களில் பாட்டுடைத் தலைவனின் இயற்பெயர் சுட்டப்பெறும். புறப்பாடல்களில் கூற்றுமுறைக்கு இடம் இல்லை. புலவர்கள் அனுபவத்தை நேரடியாகப் பாடிவிடுவர். புறத்துறைகள் புலவர், மன்னர், புரவலர் பற்றியதாக அமையும். மன்னர் அதிகாரிகளுக்கும் பாடகர்கட்கும் பட்டமளித்தனர். அது மாராயம் எனப்பட்டது (தொல். புறம். 63)

விழா

பிறந்த நாள்விழா, முடிசூட்டுவிழா, வெற்றிவிழா என அர்த்தமுள்ள விழாக்களை ஆண்டுதோறும் கொண்டாடினர் என்று தொல்காப்பியம்

கூறுகிறது. பாடாண்திணை, ஆற்றுப்படை பற்றிய நூற்பாக்கள், ஈதல் இசைபட வாழ்ந்த மன்னர்களின் மனிதநேயத்தைக் காட்டுகின்றன. போரும் தவிர்க்க முடியாததாய் ஈகையும் தவிர்க்க முடியாத கடமையாய் இருந்தன.

பகுப்பு

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை ஆகிய நான்கும் போருக்கு உரியன. வாகை, பாடாண், காஞ்சி போரோடு ஈகை, புகழ், கருணை ஆகியவற்றுக்கும் உரியன. ஆநிரை அக்காலத்தில் பெருஞ்செல்வமாகக் கருதப்பட்டது. களிற்றுப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என 4 வகைப் படைகள் இருந்தன. நடுகல் வழிபாடு இருந்தது.

கல்வி

பண்டைத் தமிழருக்கு உலக அமைப்புப் பற்றிய அறிவும் - ஐந்து பூதங்களால் உலகம் ஆனது என்ற தெளிவும் - 6 பருவங்கள், 6 சிறுபொழுதுகள் பற்றிய அறிவும் இருந்தது. கல்வி முறையில் நான்கு பகுப்பினர்க்கும் (அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்) வேறுபாடுகள் இருந்தது. அது சமச்சீர் கல்வி அல்ல.

மக்கட் பிரிவு

சமூகப் பிரிவுகள் தொழில் சார்ந்தும், ஆரியர் தாக்குரவால் பிறப்புச் சார்ந்தும் அமைந்திருந்தன.

தொன்மம் இன்மை

தொல்காப்பியர் தொன்மங்களைப் பற்றி நூற்பா செய்யவில்லை. அன்று தமிழில் தொன்மங்கள் இல்லை. வீரயுகப் பாடல்களுக்கான விதிகளை வடித்துக் கொடுத்த தொல்காப்பியத்தில் மனிதவீரமும் மனிதநேயமும் அடிக்கருத்துக்களாகச் சுட்டப் பெற்றுள்ளன.

தொல்.புறம், வெறும் போர் நிகழ்ச்சிகளை மட்டும் சுட்டாமல் மக்களின் கடமைகளையும் சுட்டுகின்றது.

புலவர்கள் வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ மூலம் மன்னர்களுக்கு உரிமையோடு அறிவுரை வழங்கிய செய்தி அறிவோர்க்கு இருந்த சிறப்பினைக் காட்டுகின்றது.

பரிசில் பெற்ற புலவர் நிலையும், பரிசில் வழங்கிய புரவலர் நிலையும் அவருக்குள் இருந்த உறவைக் காட்டுகின்றன (1037).

சமூக, அரசியல், வரலாறு

அந்த வகையில் நாட்டு நடப்பினைப் பேசும் புறத்திணை, தமிழரின் வீர வரலாற்றையும் கொடைச் சிறப்பினையும் பெரிதும் விளக்குகின்றது.

அன்று இருந்தது முடியாட்சி முறைதான் என்றாலும் அது இன்றுள்ள குடியாட்சி முறைபோல இயங்கிற்று என்பதைத் தொல்காப்பியர்,

"நடை மிகுத் தேத்திய குடைநிழல் மரபு"

என்றார். எத்தகைய ஆட்சிமுறையாக இருந்தால் என்ன ! மக்கள் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். அவர்களை அப்படி வைத்திருக்க வேண்டிய கடமை மன்னருக்கு இருந்தது. தொல்காப்பியப் புறத்திணை நூற்பாக்களையும் அவற்றிற்குரிய உரைகளையும் இலக்கிய மேற்கோள்களையும் படிக்கும் போது தமிழ்ச் சமூக வரலாற்றின் (Social History of Tamils) பெருமை தெரியவரும்.

ஒருவன் தாங்கிய பெருமை - காட்டாறு போல வந்த பகைவரை அணைக்கட்டுப் போல ஒருவனே தாங்கினான் என்னும் போது நாட்டுப்பற்றும் புலனாகின்றது.

பெருங்கடற்படைச் சின்னங்கள் எழுப்பப்படும் போது கடைப்பிடிக்கப்பட்ட சடங்குமுறையினைத் தொல்காப்பியர்,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் (1006)

என்று வரிசைப்படுத்தினார். இறந்தவரை அவரது சுற்றத்தார் கண்டு வணங்கும் பொருட்டுக் காட்சிப்படுத்துவதைக் 'காட்சி'என்றும், இறந்தோரை ஓர் இடத்தில் வைத்துப் பஞ்சபூதங்களும் எடுத்துக்கொள்ள அழைப்பதைக் 'கால்கோள்' என்றும், எஞ்சிய எலும்புகளை எடுத்துவந்து தூய்மைப்படுத்துவதை 'நீர்ப்படை' என்றும், பின்பு நீத்தோருக்கு எழுப்பப்படும் நினைவுச் சின்னத்தை 'நடுகல்' என்றும், அந்நினைவுச் சின்னத்தில் இறந்தவருக்கு வைக்கப்படுகின்ற பொருட்களைப் 'பெரும்படை' என்றும்,

பின்னர் இறந்துபட்டவரைப் பற்றி அவரது நற்செயல்களையும் பண்புகளையும் 'வாழ்த்துதல்' என்றும் பெருங்கடற்படைச் சின்னம் உருவான விதத்தையும் கடைப்பிடிக்கப்பட்ட பல்வேறு சடங்குகளையும் பற்றித் தொல்காப்பியம் தெளிவுற இயம்புகின்றது. கொடுமணல் அகழ்வு ஆராய்ச்சியில் கிடைத்த கற்பதுக்கைகளும் எலும்புத் துண்டுகளும் தொல்காப்பியச் செய்திகளை உறுதிப்படுத்துகின்றன (கா. ராஜன், தொல்லியல் நோக்கில் சங்க காலம், ப, 33)

தொல் பொருளை மாணவர்கள் ஆர்வமுடன் கற்கப் பின்வரும் உத்திகளைக் கையாளலாம்.

1. அண்மைக் காலத்தில் தொல்காப்பியம் சங்க இலக்கியம் குறித்து வெளிவந்த உங்கள் மாணவர்களின் நூல்களைப் பார்வை நூல்களாகச் சேர்க்கலாம்.

2. முனைவர் மு.வ., முனைவர் வ.சுப., முனைவர் மருதநாயகம், முனைவர் தமிழண்ணல் போன்றோர் தொல்காப்பியம், சங்க இலக்கியம் பற்றி எழுதிய நூல்களைப் பார்வை நூல்களாகச் சேர்க்கலாம்.

3. இன்றைய பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் செம்மொழி ஆய்வுக் கட்டுரை நூல்களைப் பாடப் பகுதியில் சேர்க்கலாம்.

4. செம்மொழி இலக்கிய, இலக்கணக் கருத்தரங்குகளுக்குக் கட்டாயம் மாணவர்களை அனுப்பிப் பங்கு பெறச் செய்யலாம்.

5. தொல்காப்பியத்தை எளியமுறையில் இனிய முறையில் இலக்கிய இன்பம் தோன்றும்படி இக்காலக் கலை இலக்கியங்களோடு ஒப்பிட்டு மாணவர்க்கு உளவியல் நோக்கில் கற்றுக் கொடுத்தல் நன்று. அகத்திணைப் பாட்டை, காதல் பாட்டு என்று சொல்லலாம். அதுபோல பிறவற்றைச் சோகப்பாட்டு, தத்துவப் பாட்டு என்றெல்லாம் சொல்லிக் காட்டலாம்.

6. இயன்றமட்டில் நல்ல தமிழ்நடையில் சரளமாகப் பேசிப் பாடம் நடத்துதல் நன்று. ஒவ்வொரு பாடவகுப்பின் நிறைவாக வினா – விளக்கமுறை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். நல்ல வினாக்களுக்கு மதிப்பெண் வழங்கலாம்.

திருக்குறள் ஓர் அரிய செல்வம்

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

கல்வியா? பொருளா? எது சிறந்தது? பொருட்செல்வத்தினும் கல்விச் செல்வமே சிறந்தது. பொருட்செல்வம், வெள்ளத்தால் அழியக் கூடும்; வெந்தனலால் வேகக்கூடும், வேந்தரால் கொள்ளக் கூடும்; கள்வரால் பறிக்கக் கூடும். ஆனால் கல்விச் செல்வத்திற்கு இது போன்ற குறைபாடுகள் ஏதுமில்லை. அதனால் அழிவில்லாத கல்விச் செல்வமே சிறந்தது.

கீழே விழுந்தால் நொறுங்கிப் போகும் மட்பாண்டங்களை நாம் வாங்குவதில்லை. நீண்ட நாள் பயன்படும் செப்புக் கலங்களை - பித்தளைக் கலங்களை வாங்குகின்றோம். இதற்குக் காரணம் அழியும் பொருள்களையும், அழியாப் பொருள்களையும் அறிந்துக் கொண்டதேயாம். நிலையான கல்விச் செல்வத்தை விலக்கிவிட்டு நிலையில்லாத பொருட் செல்வத்தையே பெறுவதில் காலத்தைக் கழிக்கின்றோம். இதற்குக் காரணம் அறியாமை என்னும் இருளேயாம்.

பொய்யில் புலவர், கல்விச் செல்வம், பொருட் செல்வம், பணிவுச் செல்வம், அருட்செல்வம், செவிச் செல்வம், மக்கட் செல்வம் முதலிய செல்வங்களை மொழிந்துள்ளார். அவற்றைக் குறட்பாக்களில் கண்டுவப்போம்.

கேடில் விழுச்செல்வம் கல்வி - (குறள் - 400) பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள - (குறள்- 241) பணிதல் - செல்வர்க்கே செல்வம் - (குறள் - 125) அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் - (குறள் - 241) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் - (குறள் - 411).

தெய்வப் புலவர் மக்கள் செல்வத்தை மக்கட்பேறு (பேறு – செல்வம்) என்ற தொடரால் இரண்டு குறட்பாக்களில் குறிப்பிடுகின்றார். அவ்விரண்டு குறட்பாக்களைக் கண்டு மகிழ்வோம்.

நன்கலம் நன்மக்கட் பேறு – குறள் – 60
மக்கட்பேறு அல்ல பிற – குறள் – 61

தொகை அகராதி பதினாறு செல்வங்களைக் கூறுகிறது. இப்பதினாறு பேறுகளையும் ஒன்றுக் கொன்று மிகையோ, குறையோ இன்றி சமனாகவும் சீராகவும் பெற்று வாழ்வதே உண்மையான வாழ்க்கை, முறையான வாழ்க்கை, முழுமையான வாழ்க்கை. அப்பதினாறு பேறுகளையும் இங்கு கண்டு களிப்போம்.

1. புகழ் 2. கல்வி 3. வலி 4. வெற்றி (வென்றி) 5. நன்மக்கள் 6. பொன் 7. நெல் (உணவு) 8. நல்லூழ் 9. நுகர்ச்சி (துய்த்தல்) 10. அறிவு 11. அழகு (கவின்) 12. பொறுமை 13. இளமை 14. துணிவு 15. நோயின்மை (ஊறுபாடு இன்மை) 16. வாழ்நாள்.

இப்பதினாறு பேறுகளும் திருக்குறளில் அமைந்துள்ளன என்பது வியப்புக்குரியதே அன்று. ஏனெனில் உலகப் பொதுமறை காலத்தை வென்ற கருத்துக் களஞ்சியம்.

எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்......

என்று மதுரைத் தமிழ் நாகனார் திருவள்ளுவ மாலையில் பகர்ந்துள்ளார். அதனால் பதினாறு பேறுகள் இதனுள் அமைந்திருப்பது வியப்பே இல்லை. பதினாறு பேறுகள் அமைந்துள்ள குறட்பாக்களை நோக்கி இன்புறுவோம்.

1. பொய்யாமை அன்ன புகழில்லை – குறள் – 216
2. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி – குறள் – 397
3. வினைவலியும் தன்வலியும் – குறள் – 471
4. வேலன்று வென்றி தருவது – குறள் – 546

5. தம்மின் தம்மக்கள் அறிவுடைமை - குறள் – 68

6. சுடச்சுடரும் பொன் போல் - குறள் – 267

7. செவிக்குணவு இல்லாத போழ்து - குறள் – 412

8. ஊழையும் உப்பக்கம் காண்பர் - குறள் – 620

9. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் - குறள் – 1005

10. மெய்ப்பொருள் காண்பதறிவு - குறள் – 355

11. தொல்கவின் வாடிய தோள் - குறள் –1235

12. இகழ்வார்ப் பொறுத்தல் தலை - குறள் – 151

13. இளையர் இனமுறையர் - குறள் – 698

14. துணைமை துணிவுடைமை - குறள் – 688

15. ஊறுபாடில்லை உயிர்க்கு - குறள் – 945

16. வாழ்நாள் வழியடைக்கும் கல் - குறள் – 38

பொன் என்னும் பொருட்செல்வம் பதினாறில் ஒன்றுதான் என்பதை மறந்துவிடுகின்றோம். பொருட்செல்வத்தை மட்டுமே பெறுதற்கு ஆசைப்படுகின்றோம். அதனால் மற்ற பதினைந்து செல்வங்களையும் இழந்து வருந்தி வாடுகின்றோம். இந்த அறியாமையை எப்படிப் போக்குவது?

தெய்வ நூலான திருக்குறளைக் கசடறக் கற்று அதன் வழியில் வாழ்பவரை விட்டு அறியாமை நீங்கும். அவரைத் தேடி பதினாறு செல்வங்களும் ஒன்று சேர்ந்து ஓடி வரும்.

பதினாறு செல்வங்களையும் அளிக்கும் திருக்குறள் ஓர் அரிய செல்வமே.

செல்வத்துள் செல்வம் **குறட்செல்வம்** அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

அரங்கனார், உ.வே.சா. குறுந்தொகை உரைகளில் இலக்கண மேற்கோள்கள்

பெ. பேபி
சிதம்பரம்

முன்னுரை

இலக்கண உரையாசிரியர்கள் நூற்பாவிற்குப் பொருள் சொல்வதோடு மட்டுமில்லாமல் பல்வேறு பாடல்களைச் சான்றுகாட்டி எளிமையாகப் புரியும்படி விளக்கிச் செல்வர். இலக்கிய விதிகளின்படி வரையறுக்கப்பட்ட இலக்கணக் கருத்துகளை விளக்குவதற்கு இலக்கியங்களைச் சான்றுகாட்டி விளக்குதல் என்பது மிக அவசியமாகும். இலக்கிய நூல்கள் எழுதப்பட்டுச் சில நூற்றாண்டுகள் கழித்து வாசிக்கும் ஒருவருக்குச் சொற்பொருள் மாற்றத்தால் அந்நூல்கள் புரிந்து கொள்வதில் இடைவெளியை ஏற்படுத்துகின்றன. இந்த இடைவெளியைக் குறைக்க இலக்கிய உரையாசிரியர்கள் பல நிலையில் செயல்படுகின்றனர். அந்நிலையில் அந்தப் பாடல்களின் பொருளை விளக்குவதோடு அவற்றின் விதிமுறைகள் சார்ந்து பகுக்கப்பட்ட இலக்கண நூற்பாக்களைப் பல நிலைகளில் பொருத்திக் காட்டுகின்றனர். அவ்வகையில் தொடக்கக்கால இலக்கிய உரையாசிரியர்கள் ஆனாலும் சரி, இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்கள் ஆனாலும் சரி, இந்த மரபைத் தொடர்ச்சியாகப் பின்பற்றியுள்ளனர்.

இத்தகைய இலக்கிய உரையாசிரியர்கள்பாரம்பரியத்தில் பேராசிரியரால் 380 பாடல்களுக்கும்இ நச்சினார்க்கினியரால் மீதமுள்ள 20 பாடல்களுக்கும் உரையெழுதப்பட்டு இன்று கிடைக்காமற் போன குறுந்தொகை நூல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. பழைய உரைகள் கிடைக்காத நிலையில் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நூலைப் பதிப்பித்து உரையெழுதிய சௌரிப்பெருமாளரங்கனார் மற்றும்

உ.வே. சாமிநாதையர் ஆகியோர் குறுந்தொகைக்கு எழுதிய உரைகளில் எவ்வாறெல்லாம் இலக்கண மேற்கோள்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இலக்கணம் விளக்கம்

இலக்கணம் என்பது மொழியைப் பிழையின்றிப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் மட்டுமல்லாது பொருளைத் தெளிவாக அறிவதற்கும் பயன்படுவதாகும். இலக்கணம் என்பதற்கு "இலக்கு அல்லது நோக்கம்' என்று பொருள் உண்டு. இதனை "இலக்கு - இலக்கணம் - சிறந்த நடைக்கு எடுத்துகாட்டாக அல்லது கற்றோர் பின்பற்றும் இலக்காகக் கூறப்பெறும் மொழியமைதி இலக்கணம்" என்று இரா. இளங்குமரனார் கூறுவர். எனவே சொற்களின் பொருளைத் தெளிவுப்படுத்துவதற்கும் பொருள் புலப்பாட்டிற்கும், கருத்து விளக்கத்திற்கும் இலக்கணம் உறுதுணை புரிகிறது.

"ஒரு நூலுக்கு உரைவரையும்போது சொற்களின் இலக்கணக் குறிப்புகளைச் சுட்டிக்காட்டுவது பண்டைய உரைநெறிகளுள் ஒன்று. பொருளைத் தெளிவுபடுத்துவதற்கும் பொருளின் சிறப்பை உணர்வதற்கும் சொற்களைச் சரியாகப் பிரித்துப் பொருள் கொள்வதற்கும் இலக்கணம் துணை புரிகின்றது" என்பர்.

மேற்கோளாட்சி - விளக்கம்

மேற்கோள் என்ற சொல்லுக்கு, "உதாரணம், சனி, போர்வை, முன்னோர் வழக்கு, மேன்மை" என்று ஐந்து பொருள்கள் கூறப்பட்டுள்ளன. உரையாசிரியர்கள் பலர் மூலநூல்களைப் பெரிதும் போற்றி உரை அமைத்துள்ளனர். இலக்கிய நூல்களுக்கு உரை அமைத்தலில் இலக்கண மேற்கோள்களையும், இலக்கணநூல்களுக்கு உரை அமைத்தலில் இலக்கிய மேற்கோள்களையும் அமைத்தே உரை செய்துள்ளனர். அவ்வகையின் முதல் அடிப்படையில் சௌரிப்பெருமாள் அரங்கனார் மற்றும் உ.வே.சாமிநாதையரும் குறுந்தொகைக்கு இலக்கண மேற்கொள்களைக் காட்டி உரை வரைந்துள்ளனர்.

குறுந்தொகை தி.சௌ. அரங்கனார் உரையில் இலக்கண மேற்கோள்கள்

தி.சௌ. அரங்கனார் தமது குறுந்தொகை உரையில் கடவுள் வாழ்த்து உட்பட 34 பாடல்களில் தொல்காப்பிய மேற்கோள்களைக் காட்டி பொருள் விளக்கம் தந்துள்ளார் என்பதனைக் கீழ்க்கண்ட அட்டவணை குறிப்பிடுகிறது.

வ. எண்.	திணை	குறுந்தொகையில் தொல்காப்பிய மேற்கோள்கள் காணப்படும் பாடல் எண்கள்	நூற்பா எண்.
1.	குறிஞ்சி	1, 2, 13, 14, 26, 29, 38, 52, 72, 73, 74, 105	207, 305, 307; 11,12; 11;28;14,68,9;23;1,45; 12;13;36;42;48;
2.	முல்லை	65, 66	2; 44;
3.	மருதம்	8, 19, 31, 35, 46	4, 46, 48; 21; 24; 8, 4
4.	நெய்தல்	4, 5, 6	35, 36, 7; 5; 32, 17;
5.	பாலை	7, 11, 16, 22, 24, 27, 28, 37, 192, 216, 274	6; 8; 37, 26; 52; 19; 13; 28; 6; 5; 14;

குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாடல் விளக்கவுரையில் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியத்திலிருந்து 12 மேற்கோள்களை எடுத்தாளுகிறார். அடுத்த பாடலுக்கு 9 மேற்கோள்கள் காட்டுகிறார். இம்மேற்கோள் பற்றிய அடிக்குறிப்பைப் பாடல் இறுதியில் தொகுத்துரைக்கின்றார். இது ஆய்வாளருக்கு மிகுந்த பயனைத் தருவதாகும். மிகுதியும் சங்க இலக்கியம், திருக்குறள், தொல்காப்பியம் இவற்றிலிருந்தே மேற்கோள்கள் காட்டியுள்ளார். அருகிய நிலையில் நாலடியார், சிலப்பதிகாரம், திருக்கோவையார், பிங்கல நிகண்டு முதலிய நூல்களிலிருந்தும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு மேற்கோள் காட்டும் தன்மை முதல் இரண்டு பாடல்கள் தவிரப் பிறவற்றிற்கு மிகுதியாக இல்லை. குறிப்பாக 75 பாடல்களுக்கு மேல் தொல்காப்பிய மேற்கோள்கள ஓரிரு இடங்களில் மட்டும் காட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

சான்றாக, 66 ஆம் பாடலில் வம்பு என்னும் சொல்லுக்கு நிலையின்மை எனப் பொருள் கூறி "வம்பு நிலையின்மை" என்ற தொல்காப்பிய உரியியல் நூற்பாவினை மேற்கோள் காட்டியுள்ளார்.

"மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பு மவையு மன்ன வப்பா லான" என ஆசிரியர் வித்ந்தோதினமையின் பறழ் குரங்குக்குட்டிக்கண் வருவதற்கு ஏற்புடைமையறிக" என்று கடுவன் - ஆண் குரங்கு; குரங்கினேற்றினைக் கடுவனென்றலும் என விதந்தோதினார் ஆசிரியர் தொல்காப்பியனார் எனத் தொல்காப்பிய மரபியல் நூற்பாவினைச் சான்று காட்டியுள்ளார்.

மேலும் தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள செய்யுளியல், மெய்ப்பாட்டியல், வேற்றுமை மயங்கியல், அகத்திணையியல், புறத்திணையில், உயிர்மயங்கியல், களவியல், பொருளியல், உரியியல், வினையியல், இடையியல், எச்சவியல் போன்ற இயல்களில் காணப்படும் நுற்பாக்கள் சிலவற்றை தி.சௌ. அரங்கனார் தம் குறுந்தொகை உரையில் 34 பாடல்களில் மேற்கோள்களாகக் காட்டிப் பொருள் விளக்கம் கூறியுள்ளமை மிகவும் சிறப்பிற்குரியதாகும்.

உ.வே.சாவின் குறுந்தொகை உரையில் இலக்கண மேற்கோள்கள்

உ.வே.சா மேற்கோள் என்ற சொல்லை "முன்னோர் வழக்கு" அதாவது உரையாசிரியர்கள் குறுந்தொகைப் பாடல்களை உதாரணங்களாக எடுத்தாண்ட இடங்கள் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார் என்பார் ஆ.மணி அவர்கள். தம் குறுந்தெகை உரையின் மேற்கோளாட்சிப் பகுதியில் கடவுள் வாழ்த்து உட்பட இருநூற்று முப்தொன்பது பாடல்களில் தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். அவற்றுள் களவியல் நூற்பாக்களையே அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்து.

மேற்கோளாராய்ச்சிக்குக் கால்கோள் செய்த பதிப்பாசிரியர்களுள் உ.வே.சாவும் ஒருவர் எனப் பாராட்டுகின்றார். அ.தாமோதரன். மேற்கோளாட்சி என்ற பகுதியின் மூலம் உ.வே.சா. தமிழாராய்ச்சிக்குப் புதிய முறையினை வகுத்துத் தந்துள்ளார் எனக் குறிப்பிடுகின்றார் குளோரியா சுந்தரமதி

இவ்விருவரின் கூற்றுகளின் உண்மைகளை உ.வே.சாவின் மேற்கோளாட்சி பகுதி வெளிக்காட்டுகிறது.

வ. எண்.	கூற்றுவகை	குறுந்தொகை கூற்றுப் பாடல்களின் எண்ணிக்கை	தொல்காப்பிய மேற்கோள்கள் உள்ள பாடல்கள்
1.	தலைவி கூற்று	180	102
2.	தோழி கூற்று	140	75
3.	தலைவன் கூற்று	62	47
4.	செவிலி கூற்று	09	05
5.	கண்டோர் கூற்று	03	03
6.	பரத்தை கூற்று	05	04
	இற்பரத்தை கூற்று காதற்பரத்தை கூற்று பரத்தை கூற்று	01 02 02	
7.	பாங்கன் கூற்று	02	02
		401	238 + 1 (க.வா)

உ.வே.சா. தம் குறுந்தொகை - கடவுள் வாழ்த்துப் பாடலின் உரைப் பகுதியில் இலக்கண, இலக்கியங்களிலிருந்து 18 மேற்கோள்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

தொல்காப்பியம். இறையனார் அகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல், கல்லாடம், நம்பியகப் பொருள், தமிழ் நெறிவிளக்கம் ஆகிய இலக்கண நூல்களிலிருந்து மேற்கோள் காட்டியிருப்பினும் மிகுதியான இடங்களில் தொல்காப்பியத்தையே கையாண்டுள்ளார் என்பதிலிருந்து இவரின் தொல்காப்பிய இலக்கணப் புலமையை நன்கு அறிய முடிகின்றது. சான்றாக, 15 ஆம் பாடலின் மேற்கோளாட்சிப் பகுதியில் தலைவி தலைவனுடன் சென்றமை அறிந்து தோழியோடு பொருந்திக் கற்பின் ஆக்கத்து நிற்றற்கண் செவிலிக்குக் கூற்று நிகழும் (தொல்.களவு.25.இளம்); இதனுள் விடலையொடு மடந்தை நட்பு, பறைபடப் பணில மார்ப்ப குறைகொண்டு நாலூர்க்கோசர் நன்மொழி போல

வாயாயிற்றெனச் செவிலி நற்றாய்க்குக் கூறினமையானும் விடலை எனப் பாலை நிலத்திற்குரிய தலைவன் பெயர் கூறியமையானும் “கொடுப்போர் இன்றியும் கரணம் நிகழ்ந்தவாறு” (தொல் கற்பு. 2. இளம்; ந.இ.வி.528), “உடன் போயினபின் செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நின்றது.” (நம்பி - 185) என மூன்று தொல்காப்பிய நூற்பாவினை மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளமை மேற்கருத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

முடிவுரை

தி.செள.அரங்கனாரும், உ.வே.சாமிநாதையரும் இலக்கிய நோக்கில் இலக்கணத்தைச் சுட்டி இலக்கண நோக்கில் இலக்கியத்தைச் சுட்டி உரையமைக்கும் இலக்கிய இலக்கண உரையாசிரியராகவே விளங்குகின்றனர்.

உரையாசிரியர்களின் நிலையில் நோக்கினால், பரிமேலழகரின் உரையை இலக்கண உரை என்பது போல இவ்விரு உரையாசிரியர்களின் உரையையும் இலக்கண உரை என்றே குறிப்பிடலாம்.

குறுந்தொகைப் பாடல்களில் பிற இலக்கண, இலக்கிய நூல்களைவிட தொல்காப்பிய நூற்பாக்களையே மிகுதியும் பயன்படுத்தியுள்ளனர் என்பது பெறப்படுகின்றது. (குறிப்பாக களவியல் ஆகும்)

அரங்கனாரின் உரையைவிட உ.வே.சாவின் உரையே மிகுதியான தொல்காப்பிய இலக்கண (களவியல்) நூற்பாக்களை மேற்கோளாகக் கொண்டுள்ளது என்பதும் பெறப்படுகின்றது.

சான்றெண் விளக்கம்

1. புலவர்.இளங்குமரன், இலக்கண வரலாறு, ப. - 41
2. இரா. அரங்கராஜன், நம்பிள்ளை உரைத்திறன், ப. - 154
3. கழகத்தமிழ் அகராதி, ப. - 794
4. தொல், சொல், உரியியல், நூ.எ. - உகூ
5. தொல்,மரபியல் நூ.எ. - கச
6. மேலது. நூ.எ.சா அ
7. ஆ. மணி, குறுந்தொகை உரை நெறிகள், ப. - 144
8. அ. தாமோதரன், திருக்குறள், மேற்கோள் விளக்கம் ப. - 25
9. குளோறியா சுந்தரமதி, டாக்டர் உ.வே.சா. சங்க இலக்கியப் பதிப்புகள் ப. - 101
10. உ.வே.சா. (உரை.ஆ) குறுந்தொகை மூலமும் உரையும்; ப. - 38.

உ
குருபாதம்

வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணத் தமிழ்த்திறன்

புலவர் தா. குருசாமிதேசிகர்

செந்தமிழில் முதலில் தோன்றியது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் ஆகும். அதன்பின் தோன்றியது பரஞ்சோதிமுனிவர் பாடிய திருவிளையாடற்புராணம் ஆகும். முதலில் தோன்றிய புராணத்தை. அச்சில் பதிப்பித்து வழங்கிய பெருமை தமிழ்த்தாத்தா உ.வே.சா அவர்களுக்கே உரியதாகும். அதன்பின் தோன்றிய பரஞ்சோதிமுனிவர் புராணம் தமிழில் பெரும்பான்மை பயிலப்பட்டு வருகின்றது. வரலாற்றுச் சம்பவங்கள் வேம்பத்தூரார் திருவிளையாடற் புராணத்தில் உள்ளதுபோல் பரஞ்சோதியார் புராணத்தில் இல்லை என்பது தமிழ்வல்லார் கருத்தாகும். பழைய திருவிளையாடலே ஈண்டு சிந்தனைக்குரியது.

வேம்பத்தூரார்

சொல்நயமும் பொருள்நயமும் மிக்க பாடல்களை அருளிய ஆசிரியர் பெரும்பற்றப்புலியூர் நம்பி என்பவராவார். வேம்பத்தூரார்ச் சோழியர் வகுப்பில் கௌணியகோத்திரத்தில் பிறந்தவர். கௌணியகோத்திரம் - கௌண்டியகோத்திரம் என்று வழங்கும். புறநானூற்றிலுள்ள, பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் என்பவரும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும் இந்த கௌண்டிய கோத்திரத்தார் ஆவர். பாண்டியநாட்டு செல்லிநகரில் தோன்றியதால் இவ்வாசிரியர், செல்லிநகர் பெரும்பற்றப்புலியூர் நம்பி எனவும் வழங்குவர். தில்லைக் கூத்தப்பெருமான் திருவடிக்கு மிக்க அன்புபூண்ட குடும்பத்தார் ஆதலின், புராணத்தில் பெரும்பற்றப்புலியூர்நம்பி துதி அமையப்பட்டுள்ளது காரணமாகும் என்பர்.

செல்லிநகர்

சங்கரன்கோயில் வட்டம் கரிவலம்வந்தநல்லூர்ப் பக்கம் இச்செல்லிநகர் உள்ளது. இக்காலத்தில் பனையூர் என்று வழங்கப்படும். செல்லியாரம்மை என்ற பெயருடைய துர்க்கா தேவியைத் தனக்கு அதிதேவதையாக உடைமையின் இவ்வூர் 'செல்லிநகர்' என்று பெயர் பெற்றது என்பர்.

வேம்பத்தூர்

வேம்பத்தூர் "பாண்டியநாட்டின் வடகிழக்கே இன்றும் புகழ் மிக்க ஊராக விளங்குகிறது. வேம்பத்தூர் 'பிச்சுவையர்' இன்றும் புகழ்பெற்ற புலவர் மரபில் வந்தவர் ஆதலின் முகவை சமஸ்தானத்தின் ஆத்தானப் புலவராக விளங்கியதைப் பலரும் அறிவர். இவர்களின் முன்னோரும் செந்தமிழ்ப் புலவராக விளங்கினர் என்பதற்கு அகநானூறு 156ஆம் செய்யுளும், புறநானூறு 317ஆம் செய்யுளும் வேம்பற்றூர்க் குமரனார் பாடியவை என்தனால் தெரியவரும். இவ்வூர் அந்தணர்கள் பல ஊரில் வாழ்ந்தாலும் வேம்பத்தூர்க் கவிராயர் மரபினர் என்றே வழங்கப்படுகின்றனர். புலவர் சதாசிவம் என்பவர் இக்காலத்தில் வாழ்ந்தவர். 'சௌந்தரியலகரி' உரையுடன் வெளியிட்டு, பெரியவர்கள் ஆசியைப் பெற்றவர்.

மதுரைத்திருப்பணி

இவ்வேம்பத்தூர்க் கவிராயர்கள் பெற்ற பெருவளத்தை, பெருஞ்சித்திரனார் என்ற புலவர் மனைவியாரிடம் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை "எல்லோர்க்கும் கொடுமதி மனைக்கிழவோயே" என்பது போல, பல தருமங்களைச் செய்துள்ளனர். அருட்கொடையாக, மதுரை மீனாட்சியம்மையின் சந்நிதிக் கோபுரம் இவர்களில், ஆனந்தத்தாண்டவ நம்பி என்பவர் திருப்பணி செய்தது என்று கோயில் திருப்பணிமாலை தெரிவிக்கும். கி.பி.1227 - 28 என காலத்தை நிர்ணயித்துள்ளனர். புவியரசர் கட்டிய திருப்பணிகளில் கவியரசரும் பங்கு பெற்றிருப்பது போற்றி வணங்கத்தக்கதாகும்.

ஆசிரியர் சிறப்புகள்

பெரும்பற்றப்புலியூர் நம்பியின் ஞானாசிரியர் சிதம்பரம் மாளிகை மடத்திலிருந்த வெண்காடருடைய சீடராகிய விநாயகர் என்பவராவார்.

இதனைப் புராண வாழ்த்து 3ஆம் பாடலில் தெரிவிக்கிறார். இவ்வாசிரியரின் இருமொழிப்புலமை இப்புராணத்தால் தெரியவரும். பிறரை நல்வழிப்படுத்துதல், சிவனருளை நினைந்து செம்மாந்து போற்றல். பாண்டியரை 'தெய்வப்பாண்டியர்' என்று தெளிவித்தல், சொக்கநாதர் கோயில் முன்னேதோன்றி சிறப்பினை, இவர் தம்பாடலில் 'தொல்லை ஆலயம்' பெரியகோயில் என்றும் சிறப்பித்துப் பாடுவார்.

நான்மாடக்கூடல்

மதுரைக்கு நான்குமாடங்கள் கூடுதலின் நான்மாடக்கூடல் என்ற பெயருண்டு. அவை, திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர், இனி. கன்னி, கரியமால், காளி, ஆலவாய் என்றுமாம் என்பது கலித்தொகை 92ம் பாடல், நச்சினார்க்கினியர் உரையாகும். இதனை இப்புராணந்தவிர வேறுபுராணங்கள் விளக்கவில்லை என்று ஆய்ந்து கூறிய செய்திகளும், 'நீலமணியின் குற்றத்தை வந்தவழி கண்டுகொள்க' என்று அடியார்க்கு நல்லார் உரைத்த செய்தியை, இவ்வாசிரியர் மாணிக்கம் விற்றபடலத்தில் விரித்திருப்பதை, எண்ணிப்படித்தாய்ந்துரைக்கும் உ.வே.சா. அவர்களின் உழைப்பைப் போற்றுவதற்கு ஒருவாய் போதாது. பரஞ்சோதிமுனிவர் புராணத்தில் பாண்டியர்களை, வரையறையின்றிச் சொல்லிப்போவார், அது வரலாற்றுக்குப் பயன்படவில்லை என்றும், வேம்பத்தூரார் புராணத்தில் ஓரளவு வரலாற்றுணர்வோடு, உக்கிரபாண்டியர், வரகுணபாண்டியர் பற்றிய குறிப்பு காணப்படுகிறது என்றும் வரலாற்றாய்வாளர்கள் புகழ்வர்.

கற்பகவிநாயகர்

மதுரைக்கோயிலில், இப்போதுள்ள முக்குறுணி விநாயகர், புராணகாலத்தில் 'கற்பகவிநாயகர் என்றழைக்கப்பட்டார். இவ்விநாயகரையே சுந்தரபாண்டிய நூலிலும் துதிக்கப்பட்டுள்ளது. சித்திவிநாயகர் மட்டுமே பரஞ்சோதிமுனிவர் புராணத்தில் துதிக்கப்பட்டுள்ளது. தெப்பக்குளம் தோண்டும்போது இவ்விநாயகர் கிட்டியது என்பது பிற்காலக் கட்டுக்கதையாகும்.

தமிழ்ப்பாண்டியர் துதி

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலியவற்றைத் தொகுப்புவித்தவர் பாண்டியன் உக்கிரப்பெருவழுதியாகும். பாண்டியர்களும் தனித்தனியாகத்

துதிக்கப்பெறுவது, இந்நூலுக்குரிய தனிச்சிறப்பாகும். பாண்டியர் துதி தமிழ்நயம் உணரத்தக்கதாகும். பாண்டியனைத் 'தெய்வப்பாண்டியன்' என்றும், சீரார் சங்கத் தமிழ் ஆய்ந்தவன் என்றும் வழுதியைத் துதிப்பார்.

தாரார் நிம்பத் தொடையிலங்கச்

சசிமா மரபு தனில்வந்து

பாரார் பெருவாழ்வுறத் தெய்வப்

பாண்டியனென்று முடிசூடிப்

பேராதுரவால் அரசாளும் பெருமான்

திருமாமக வாய்முச்

சீரார் சங்கத் தமிழாய்ந்த

தென்னன் பொன்னங் கழல்போற்றி!

என்ற பாடலில் 'பாண்டியர்' சந்திரகுலத்தின் (சசிமரபுதனில்) மரபு வழி என்று சுட்டப்படுகிறது.

பாண்டியநாட்டின் பெருமை

பாண்டியநாட்டின் தனித்தன்மையைக் காட்டுவது தென்றல் ஒன்று, தமிழ்ச் சங்கம் இரண்டு, மானிடராய் வந்து சொக்கர், நற்கனகக்கிழி தருமிக்குக் கிட்டும்படி செய்தது மூன்று. இம்மூன்றையும் விளக்கும் தமிழ்த்திறன் தெரிவிக்கும் பாடல்.

ஆவியங் தென்றல் வெற்பின்

அகத்தியன் விரும்புந்தென்பால்

நாவலந் தீவம் போற்றி

நாவலந் தீவந்தன்னுள்

மூவர்கட்கு அரியான் நிற்ப

முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்

பாவலர் வீற்றிருக்கும்

பாண்டி நன்னாடு போற்றி

என்ற பாடலில் தெய்வப்பாவலர் என்று பொய்யடிமையிலாப் புலவர்களை அடையாளங்காட்டுகிறது.

சொல் இன்பம்

திருவம்பலத்தைத் துதிக்கும் புராணத்தமிழில் சொல்லின்பம் துள்ளிவிளையாடும். அம்பலவர்துதிப்பலனில் அழகுத்தமிழ் தொகுத்து நிற்கிறது.

"அருளுந் தொகும்பொருளும் திருந்த்முகுந்
தொமுங்குலமுந் தரும்!
பரிவொன்று சந்ததியும் புகும் பழியஞ்சும்
ஒண்தொடியும் பொருந்து
உருவும் திறம் பிறவுந் துளங்கொளியும்
பிறங்கறிவும் செமுந்
திருவும் பெரும்புகமுந்தரும் திருவம்பலம்
திருவம்பலம்!

இப்பாடலில் திருவம்பலம் அருள், சந்ததி முதலியவற்றைத் தரும் எனக் குறிப்பிடுவது இன்புறத்தக்கது.

பொன்னம்பலம்

இத்துதிப்பாடலில் எதுகை இன்பம் பொலிந்து விளங்குகிறது. அப்பொன்னம்பலப் பாடல் படித்து மகிழ்தற்குரியது.

"முன்னங் கருங்கண்ணன் கிடந்து இம்மண்குடைந்து
உன்நைந்துறும்
தன்னண்டம் என்று அன்னம்பறந்து இன்னம்
பெருங்கின்னம்படும்
பன்னும் பழஞ்சொல் மந்திரம் பன்னுங்கள்
என்று உன்னும் பதம்
பொன்னஞ்சிலம்பு இன்னந்தரும் பொன்னம்பலம்
பொன்னம்பலம்" (கின்னம் – துன்பம்)

இப்பாடலில் அமைந்த சொல்நடை, பொருள்நடை படித்துமகிழ்தற்குரியதாகும். இத்திருவிளையாடலே பழையநூல் ஆதலால் ஆய்வு செய்த பதிப்பாசிரியர், குமரகுருபரர் காலத்திற்கு முந்தியது என்று குறிப்பார்.

உலகுக்கு உணர்த்தல்

ஆசிரியர் மாறியாடிய திருவிளையாடலில் "அவ்வாடலைக் கண்டேன்; அருவினை கண்டிலேன்" என்று உணர்த்துவார்.

"அடியவர்க்கு எளியர் சொக்கர் அருள்தனைப் பாரீர்" என்று பாண்டியனுக்காக மாறியாடிய மகேசனின் மகிமையைப் பாராட்டி மகிழ்வார். இந்திரன் முடிமேல் வளை எறிந்து வாகைசூடிய பாண்டியன், சொக்கரின் திருவருள்தான் காரணம் என்பதை உணர்ந்து வணங்கினான் என்பதைக் கூறவந்த ஆசிரியர் "கடவுளருள் இருந்தால் எதையும் செய்து முடிக்கலாம்" என்ற கருத்தில், 'எந்தையை நினைவார் தங்கட்கு யாது செய்திட ஒண்ணாதால்" என்பார்.

நாரைக்கு அருள்புரிந்த நயத்தை ஆசிரியர் நமக்கு அருள்வேண்டும் என்றால், "சிவனை மறவாமல் வணங்குங்கள்" என்று வண் தமிழில் உணர்த்துவார்,

"கருதுதீர் என்றும்" பொல்லாக் கடையராயினுங் கொல்லது இங்கு அரனை வந்திப்பரேல் வானாள் ஆவதற்கு ஐயமின்றே! இவ்வரி ஆசிரியரின் அறம் உணர்த்தும் தமிழாகும்.

மனம் உருக்கும் தமிழ்ப்பாடல்

முன்னைத்தவத்தினாலேயே ஆசை நீங்கும், அவ்வாசையும் சிவத்தலமடைந்தால் தான் நீங்கும் என்ற செய்தி, இப்புராணத் தமிழில் விளக்கும் பாடல் உணர்வுதரும் தமிழ்ப்பாடலாகும். அப்பாடல் இது.

"திருந்து முற்றவத்தினாலே செல்வமேல் ஆசைவிட்டுப்
பரந்த நெஞ்சு ஒடுங்கக்கண்டு பன்முறை அதிசயத்துஇப்
பெரும்பதி அடையாமுன்னர் அடைந்தது பேரன்பு எந்தை
பொருந்திய தலங்கள்தம்முன் தலமிதுபோல் ஒன்று இன்றே"

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கி வழிபடுபவர்க்கே பாசநீக்கமும், வீடுபேறும் சித்திக்கும் என்பது மெய்ப்பொருட்கோட்பாடு. இக்கோட்பாட்டில்

தலைநின்ற வாதவூரர், திருப்பெருந்துறைத் தலம் சென்றபோது, நேர்ந்த நிகழ்ந்த 'மனஉணர்வைச்' சித்தரிக்கும் வேம்பத்தூரார் தமிழ், தமிழ்மக்களுக்கு நல்ல வழிகாட்டியாகும்.

ஆசிரியரின் தமிழ்த்திறன்

திருமுகங்கொடுத்து நின்ற பாணபத்திரனை ஆசிரியர் அறிமுக்கப்படுத்தும் சொல்வரியில்,

பத்திரங்கொடுத்து ஒதுங்கிப்

பத்திரன் பணிந்து நின்றான்' என்ற தொடரில் பத்திரம் திருமுகத்தையும், பத்திரன் பாணபத்திரனையும் குறிக்கும்.

கால்மாறி ஆடிய படலத்தில் 'மாறன் ஆழ்துயர்கெட மாறியாடினார்' என்ற தொடரில் சொல்லின்பம் விளையாடும்.

பாண்டியநாட்டிற்கு மற்றொருநாடு இணையில்லை என்ற செய்தி பாடலாக மலர்கிறது. சொக்கர் மனிதர்போல மதுரைக்கு வந்து தடாதகைப்பிராட்டியாரை மணந்து, பாண்டியநாட்டை ஆண்ட பெருமை மற்ற நாட்டிற்கு இல்லை என்ற கருத்தில் அமைந்துள்ள,

"புராபுரன் மனிதர்போல மண்டலத்திழிந்து
வேந்தர் வல்லியை மணந்து புவனமூன்றும்
இருந்து அரசாளக்கண்டீர்! இத்தகுத்
தண்டமிழ்ப்பாண்டி நாட்டின் தகவுண்டோ
மற்றொருநாடு" என்ற பாடல் சிந்திக்கத்தக்கது.

இதனையே செந்தமிழ்க்குமரகுருபரர் "தமரநீர்ப்புவனம்" என்ற பாடலில் அம்மையும் அப்பரும் அறுமுகனும் மதுரையில் மூவரும் முறையே தடாதகாதேவி, சுந்தரமாறன், உக்கிரப்பெருவழுதி என பாண்டியமரபு தழைக்க வந்த செய்திக்கு, தமிழ்ச்சுவை வேண்டி வந்ததாகக் காரணம் கற்பித்து மகிழ்வார்.

திருவாலவாயுடையார் (வேம்பத்தூரர்) திருவிளையாடற்புராணத்தில் சுந்தரன் என்ற சொல்லாட்சியைவிட "சொக்கன்" என்ற பெயரையே மிகக்கையாள்வது சிந்திக்கத்தக்கதாகும். இத்திருவிளையாடலின் அரிய செய்திகளைத் தொடர்ந்து மேலும் சிந்திப்போமாக.

எஸ். ராமகிருஷ்ணனின் பாரதக்கதை மீட்டுருவாக்கம்

அ. ரஜினி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முன்னுரை

இதிகாசங்களில் மகாபாரதமும் ஒன்றாகும். இது ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிறது. இதனை வடமொழியில் வேதவியாசர் இயற்றினார். அகத்தியபட்டர் என்பவர் வடமொழியில் பாலபாரதம் என்ற பெயரில் பாரதக் கதையை எழுதினார். இவ்விரு நூல்களையும் மூலநூலாகக் கொண்டு தமிழில் வில்லிபுத்தூர் ஆழ்வார் வில்லிபாரதத்தைப் படைத்தார்.

இந்திய மொழிகள் அனைத்திலும் பாரதக் கதை நிலவுகிறது. அம்மொழி மக்களுக்கேற்ப கதைகள் சித்தரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு மொழியின் பாரதக்கதை வெவ்வேறு கதைக் கூறுகளையும் கட்டமைப்பையும் கொண்டு இருக்கிறது. வடமொழி பாரதக் கதைக்கும் ஏனைய பாரதக் கதைக்கும் சில வேறுபாடுகள் இருக்கின்றன. மக்கள் மனதில் புரியாத கதைகளில் இதுவும் ஒன்றாகும். ஏனெனில் மகாபாரதக் கதைப் பற்றிய கருத்துக்கள் ஒவ்வொரு இடங்களில் பலவாறு புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது.

பாரதக்கதை

பாண்டவர்களுக்கும் - கௌரவர்களுக்கும் இடையே நடக்கும் உரிமைப் போராட்டமே பாரதக் கதையாகும். இதில் பாண்டவர்கள், கௌரவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை சொல்லப்பட்டிருக்கும். நட்பு, பொறாமை, கொடை, வீரம், காதல், துரோகம் என மனித வாழ்வின் அனைத்தும் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

பாண்டவர்கள் கௌவரவர்களுக்கு இடையே நடக்கும் பதினெட்டு நாள் போரே மாகபாரத்தின் உச்சமாகும். இதில் பதிவு செய்யப்பட்டக் கருத்துக்கள் மனிதனின் எதிர்கால வாழ்விற்குத் தேவையான சிந்தனைகளை விதைக்கிறது.

பாண்டவர்கள் உட்பட ஏனையப் பாத்திரங்கள் நன்மைக்கும் தீமைக்கும் இடையே மோதும் போராட்டச்சித்திரிப்பாகக் காணப்படுகின்றன. இந்து மதத்தின் கோட்பாடுகளைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. வேதங்களையும் புராணங்களையும் இந்திய மக்களிடையே கொண்டுச் செல்லும் வடிவமாக மகாபாரதக் கதை திகழ்கிறது. மகாபாரதக்கதை முழுவதையும் படித்தவர்கள் ஒரு சிலரே உள்ளனர். பெரும்பான்மை அனைவரும் கதைச் சுருக்கத்தினை மட்டுமே படித்திருப்பர். இந்தியச் சமூகத்தின் வரலாற்றோடு இரத்த உறவுகள், தர்ம போதனை இவற்றை எதிர் ஒலிக்கிறது. “கீதா சாரம்” என்ற கிருஷ்ண உபதேசம் மகாபாரதத்தில் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதக்கதைத் தேடல்

எஸ்.ராமகிருஷ்ணன் பாரதக் கதைத்தேடலாக “கும்பகோணம், காஞ்சிபுரம், கர்நாடகாவில் உள்ள நஞ்சன்கோடு, வட மாநிலங்களான அஸ்தினாபுரம், இந்திரப்பிரஸ்தம், குருசேஷத்திரம், துவாரகை” எனப் பல மாநிலங்களிலும், பல ஊர்களிலும் சுற்றியலைந்து பாரதக் கதைத் தேடிய இடங்களாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

மீட்டுருவாக்கம்

பதினைந்தாயிரம் பக்கமும் பதினெட்டு பாகமும் கொண்டது மகாபாரதம். ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மகாபாரத வடிவமிருக்கிறது. மகாபாரதம் சார்ந்த நிகழ்த்துக் கலைகள் உள்ளன. ஒவ்வொரு மொழியும் மாகபாரதத்தை ஒரு விதமாக அணுகுகிறது. எதிர்வினைக் கொள்கிறது. இதனை எஸ்.ராமகிருஷ்ணன் உபபாண்டவம் எனும் புதினம் வாயிலாக மறுபுனைவுச் செய்துள்ளார்.

மகாபாரதம் சரித்திரத்திற்கும், புனைவிற்கும் இடைப்பட்டது. சரித்திரம் மாதிரி ஒன்றைப் பதிவு செய்வதுதான் புனைவு ஆகும் என்பதை “நான் மகாபாரதத்தைப் புரிந்து கொண்டதின் அடிப்படையில் அதை மீள்புனைவு செய்திருக்கின்றேன். மகாபாரதத்தைப் படிக்காமலேயே அதைப்பற்றித் தெரிந்து கொண்டவர்கள் அதிகம் பேர். மகா பாரதத்தில அங்கங்குச் சில விடுபடல்கள் இருக்கிறது. இன்னொன்று சரித்திரத்திறகும் புனைவுக்கும் இடைப்பட்டது இந்நாவல்” என்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன்.

முழு மகாபாரதத்தில் உணர்ச்சிகள் தான் முதன்மைப் படுத்தப்படுகிறது. அர்ஜுனன், துரியோதனன் ஆகிய இருவருக்கும் உணர்ச்சிகள் கொதி நிலையில் இருக்கிறது. ஆகவேதான் அதை வைத்து இரத்தஉறவுகள் போராட்டத்தை நடத்த முடிந்தது. இந்தியச் சமுகத்தில் இன்று சாதிச் சண்டைகள், குடும்பச் சண்டைகள், இதன் தொடர்ச்சியாகத்தான் நடந்துக் கொண்டிருக்கிறது.

அஸ்தினாபுரத்தின் மேல் திருதராஷ்டிரனுக்கு உள்ள பற்றுதலை ஆசிரியர் கூறும்போது,

"அஸ்தினாபுரத்தின் மேல் திருதராஷ்டிரனுக்கும் ஏன் அவ்வளவு பற்றுதல்? கண் பார்வையற்றவனால் எப்படி அந்த ஊரைப் பார்க்கமுடியும்? அவர் தொடுகையினால் உணர்ந்த அந்த ஊரைவிட்டுப் போனால் அவனின் உணர்வுகள் எப்படி இருக்கும்? திருதராஷ்டிரன் இந்த உணர்வுகள் அடிப்படையில்தான் யுத்தம் தொடுத்தான்" என்று கூறுகிறார்.

சகுனி எந்த அளவுக்கு இதுவரை மோசமான ஆளாகச் சித்திரிக்கப்பட்டானோ, அவன் அப்படி இல்லை என்று இப்புதினம் ஒரு பார்வையை உருவாக்கி இருக்கிறது. கிருஷ்ணன் ஒரு சாதாரண ஆளாகத்தான் இருந்திருப்பார் என்கிற பார்வையையும் உருவாக்குகிறது. அவருக்கு நியாய, தர்மங்களைவிட இரத்த உறவே மிக முக்கியமானது என்ற பார்வையையும் பதிவுச் செய்கிறது.

உப பாண்டவம் என்ற மகாபாரதப் புனைவுக்கதையில் மகாபாரதத்தில் உள்ள துணைக் கதைப்பாத்திரங்களின் வழியாக மகாபாரதத்தினைப் பார்ப்பது போன்று மகாபாரதத்தில் ஆங்காங்கே உள்ள இடைவெளிகளையும் தன்மையையும் எஸ்.ராமகிருஷ்ணன் மறுபுனைவு செய்துள்ளார்.

"நூற்றாண்டுகளாக மதத்தின் கைகளில் புனித நூலாகக் கருதப்பட்டு வந்த மகாபாரத்தை நான் விமர்சனப் பூர்வமாக மீள் பார்வைச் செய்திருக்கிறேன். எனது நாவலில் பகவத்கீதை முக்கியப் பகுதியாக இடம்பெறவில்லை. கிருஷ்ணர் புனித பிம்பமாகக் காட்டப்படவில்லை. துரியோதனன் தீவினையின் குறியீடு இல்லை. இதுவரை மகாபாரதத்தின் பின் இயங்கும் இந்திய மனத்தின் தொன்மையையும் ஆராய்கிறது என் நாவல்" என்று எஸ். ராமகிருஷ்ணன் உபபாண்டவம் நாவலைப் பற்றி குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

மகாபாரதப் புத்தகமோ, பிரதியோ இல்லை, தோற்றுவிக்கப்பட்ட ஒரு கலாச்சாரப் பிரதிப்பலிப்புகள் அல்லது கலாச்சாரக் கூறுகள் தான் முக்கியமானதாக இருக்கிறது. ஏனெனில் மகாபாரதம் ஒரு கலாச்சார அல்லது நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போராட்ட வடிவத்தில் தான் நமக்கு அறிமுகமாகி இருக்கிறது. இதனை உபபாண்டவம் முற்றிலும் மாற்றியமைத்திருக்கிறது. தண்ணீரில் பிரதிபலித்து அலைந்து கொண்டிருக்கும் ஒரு மலையைப் போன்று மகாபாரதம், உபபாண்டவத்தில் நீந்துகிறது. உபபாண்டவம் நாவலுக்குப் பக்கத்திலிருக்கிற ஒரு வடிவம் என்ற விமர்சனமும் எழுந்துள்ளது. கதை சொல் முறை நாவலிலிருந்து இது வேறுபட்டுக் காணப்படுகிறது. இருப்பினும், மறு புனைவு என்ற தளத்தில் மகாபாரதத்தின் இடைவெளிகளையும் அதன் இருண்ட பகுதிகளையும் மீட்டுருவாக்கம் செய்திருக்கும் எஸ். ராமகிருஷ்ணன் திறன் குறிப்பிடத்தக்கச் செயலாகும். இவரது மீள் பார்வையும், மறுபுனைவும் எழுத்தாற்றல் திறனுக்குத் தக்கச்சான்றாகும்.

முடிவுரை

கருப்பொருளாக மனித அந்தரங்கத்தின் புதிர்மிகுந்த வினோத ரகசியங்களையும், உணர்ச்சிகளின் இருண்ட பகுதிகளையும், கள்ளக் கிராமத்து மக்களின் இரத்த உறவுகளையும், நவீன வாழ்க்கை முறை உருவாக்கும் ஒவ்வொரு கசப்பின் வண்ணங்களையும், சுய அடையாளங்களை இழந்த எளிய மனிதர்களின் வாழ்க்கை முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு எஸ். ராமகிருஷ்ணன் நாவலைப் படைத்துள்ளார்.

சான்றெண் விளக்கம்

1. எஸ். ராமகிருஷ்ணன் உபவாண்டவம் ப. - 5
2. மேலது நேர்காணல் ப. - 33
3. மேலது நேர்காணல் ப. - 34
4. மேலது நேர்காணல் ப.- 83

மரம்

சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

"புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே,"
"அகக்கா ழனவே மரம்எனப் படுமே,"
"இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனையே உள்ளுறுத் தனையவை எல்லாம்
மரனொடு வரூஉங் கிளவி என்ப,"
"காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையும் அன்ன!"

– தொல். பொருள். மரபு.

1இந்நவணி வரிகள், மரத்திற்கு அமைந்த விளக்கங்கள். அறிவின் ஆறாம் படியிலுள்ள மனிதன் ஓரறிவு மரம் தரும் பயன்களைப் பெருக்கிக்கொள்ளாமல் உயர்நிலை எய்தவே இயலாது!

மரங்களைப் புறக்கணிக்கும் போதெல்லாம், அவற்றை வீழ்த்தும் போதெல்லாம், அந்நிகழ்வு, பஞ்சக்காண்டத்தின் முகவுரையாகவே அமைகிற அவலத்தைத்தான், வரலாறு சிந்தும் கண்ணீர்த்துளிகள் காட்டுவதாக, உலகெங்குமுள்ள இயற்கை ஆர்வலர்கள் எடுத்துரைக்கின்றனர்.

மனிதன் மரங்களைப் போற்றிய கால கட்டங்களிலெல்லாம், மகோன்னதம் கோலோச்சியது.

மதுரையை ஆண்ட இராணிமங்கம்மாள், சாலையின் இருமருங்கிலும் நிழல்தரும் மரங்களை வளர்த்தார். "மங்கம்மாள் சாலை, மரம்நிறைந்த சோலை" என்னும் புகழ்மொழியை எவரே மறப்பர்? போதி மரத்தடியில் புத்தர் ஞானோதயம் பெற்றார். அசோகர், அமைதியை விரும்பிய காலத்தில், நிழல் கொடுக்கும் சாலைமரங்கள் தாமே, அவருடைய சேவை மனத்திற்குக் கைகொடுத்து உதவின?

ஆலமரம் ஒன்றின்கீழ், தம் பல்லாயிரம் வீரர்களை ஓய்வெடுக்கச் செய்தாராம் மாவீரர் அலெக்சாண்டர்! கொல்கத்தா மற்றும் சென்னை

அடையாறு ஆலமரங்கள், பசுமை ஏட்டின் மரகதப் பக்கங்கள்; பறவைகளின் அடைக்கலங்கள்! கோடை வெயிலில், கோவை திவான் பகதூர்சாலை வாகைமர நிழலில், அல்லது சென்னை பாண்டி கடைவீதி வாகைமர நிழலில் நடந்து செல்பவர், அம்மரங்களை வளர்த்தவரை வாழ்த்துவர்; பாராட்டுவர்.

கங்கை, கடலில் சங்கமிக்கும் பகுதியில் பசுமை மாறாக் காடுகளாகப் பரிணாமம் கொள்கிற மரங்கள் நிறைந்து, தம் பூக்கள்வழி, நூற்றுக்கணக்கானகுடம் தேனைச் சமுதாயத்திற்கு ஆண்டுதோறும் வழங்குகின்றன. காவேரி அலைக்கரங்களும் கடலின் அலைக்கரங்களும் பின்னிப்பிணைந்து விளையாடும் பகுதிகளுக்கு அண்மையில், அலையாத்திக்காடுகள் கடலையொட்டி உருவாகி, பேரலைகளின் சீற்றம் தணித்துச் சாந்தம் விளைத்துப் பல்லுயிர்ப்பெருக்க முனையம் ஆகின்றன.

மழைவரம் தரும் மரத்தொகுப்பைப் "பசுங்கடல்" என்றே மகிழ்ந்துரைப்பார் திரு.வி.க.! நம் முன்னோர், தலமரங்களை அறிவித்து, பக்தியோடு சமுதாய நலமும் காத்தனர்; உயிர்வளிக்கொடை தொடர வழி வகுத்தனர். அரசமரம், வில்வமரம் முதலாகப் பல மரங்களும் உயிரியம் சுரந்தளிக்கும் ஊற்றுகளே! காட்டை 'அரண்' என்று திருவள்ளுவர் கூறியதன் புதிய பொருளொன்று இப்போது புலப்படுகிறது!

காவிரிப் பூம்பட்டினத்தில் ஐந்து பூங்காவனங்கள் இருந்தனவாம்! பூங்காற்றின் புறப்பாடுகளாய், நகரத்தெருக்கள் தோறும் குறும்பூங்காக்கள், அறக்கொடையாளர்களால் தோன்றுமா என ஏக்கம் பிறக்கிறது!

கட்டுமான இடங்களில், மரங்களை வெட்டாமல், வேருடன் பெயர்த்துச்சென்று, வேறிடத்தில் நடும்பொறிகள் வருமா என இளம் அறிவியலாளரைப்பார்த்துக் கனிவுடன் கேட்கச் சூழல் ஆர்வலர்தம் மனம் மிக விழைகிறது!

பிறந்தநாள் கொண்டாட, மரக்கன்றுநட்டு வளர்ப்பீர்களா என இளம் தலை முறையினரைப் பார்த்து அன்புடன் வினவத் தோன்றுகிறது!

மரங்களைப்போல, ஒலிமாசும் தூசும் குறைத்துச் சூழலை மேம்படுத்த, வேறு எவை உள?

'நிழல்மரம், பூமரம், நற்கனி நல்குமரம்
காத்தல் பொதுத்தொண்டே யாம்? – சி.பா.

மக்கள் வழக்கிலே மொழி வாழும் – வரம்பிட்டு வளப்படுத்துவோம்.

பேராசிரியர்
வெ. பெருமாள்சாமி

மொழிகள் பலவற்றிலும் எழுத்து மொழி, உரையாடல் மொழி என்ற இணை நிலையைக் காண்கிறோம். அண்மைக் காலத்தில் தோன்றி வளரும் மொழிகளில் இவ்விரு வகையும் மிகையான தோற்றப் பிறழ்வின்றி ஒன்றுக் கொன்று துணைபுரிந்து இலக்கியப் படைப்புலகிலும், வழங்கும் பரப்புலகிலும் செழிக்கின்றன. ஆனால் தொன்மை வாய்ந்த செவ்விய மொழிகளில் இது சிக்கல்.

இரு மாறு நிலை

வடமொழி போன்ற இறுகிய மொழிகள் பேச்சு வழக்கின்றி ஏட்டு மொழி என்ற ஒற்றை நிலையில் உறைந்து போயின. தமிழ் அவ்வாறில்லை. பழைமைச் சிறப்பில் வேரோடிப் புதுமைப் பொலிவில் கிளை பரப்பிப் பூத்துக்குலுங்குகிறது. எனினும் எழுதப்படும் தமிழ் நடை ஒரு தளத்திலும், பேசப்படும் தமிழ் வழக்கு வேறு வடிவத்திலும் இயங்குகின்றன. அயலவர் ஒருவர் இரண்டையும் நோக்குங்கால் இரண்டும் வெவ்வேறு மொழிகள் போலும் என மயக்கமுறுவார்.

தமிழில் உரைநடை

தமிழ் உரைநடை பாட்டிடை வைத்த குறிப்புகளாகத் தோன்றிப் பின்னர் பாட்டுக்கும் நூற்பாவுக்கும் உரைகள் வரைந்தனவாகவும், இன்னும் அடுத்த நிலையில் பரமார்த்த குரு கதைகளாகவும், பிரதாப முதலியார் சரித்திரமாகவும் வளர்ந்து, இன்று சிறுகதை – புதினம் – நாடகம் – திரை உரையாடல் – துணுக்கு எனப் பல்கிப் பரவி உள்ளது. ஆனால் அண்மைக் காலம் வரை எளிமைப் படாத இலக்கியமொழியே உரையாடல் மொழியாக

எழுதப்பட்டு வந்துள்ளது. இன்றும் கூட மக்களின் மொழியில் உரையாடல் எழுதுவது உயர்வற்றதாகவே தமிழ்ப் புலவர்களால் கருதப்படுகிறது.

தொல்காப்பியர் மக்களின் பக்கம்

மரபு நிலையைப் போற்றும் பேராசிரியர்களும் இதழாளர்களும் மக்களின் பேச்சு மொழியை எழுத்தில் கொண்டுவர எதிர்பபும் தயக்கமும் காட்டுகிறார்கள். ஆசிரியர் தொல்காப்பியரே நாடக வழக்கமென்னும் புனைந்துரைத்தலும், உலகியல் வழக்கமென்னும் மக்கள் நடையும் பாடப்படுதற்குரியன என்று அன்றே வகுத்துள்ளமையைக் கருதாமல், மக்கள் வழக்கை இன்னமும் ஏற்றுக் கொள்ள ஏன் மறுக்க வேண்டும்?

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்.

(தொல். பொருள். அகத். 53)

மக்கள் மொழியை வழங்குமாற்றைக் கூர்ந்து கணித்து அதற்கும் அவர் இலக்கணம் வரைந்துள்ளார் என்பதை,

இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறல்ல செய்யுளாறே.

(தொல். சொல். 18)

ஆகிய நூற்பாக்கள் தெளிவுறுத்துகின்றன. இத்தெளிவு தொடர்ந்து போற்றப்படாமல், இலக்கியம் உயரத்தில் வீற்றிருந்து கொண்டு மக்களின் பேச்சு மொழியைத் தீண்டாது இலக்கிய நடைமுறையை உடைத்துத் தளர்த்த இன்னமும் ஏன் தயங்க வேண்டும்.

மக்களிடமே தூய மொழி

இன்றைய எழுத்து மொழியில் பிறமொழிச் சொற்கள் புகுந்து நிலை கொள்வதைப் பார்க்கிறோம். இதழாளர்கள் உட்பட பலரும் ஒருமை பன்மை

விகுதி மயங்கியும் திணைப் பிழை மலிந்தும் எழுதுவார்களேயன்றிப் பேச்சு மொழியை எழுதமாட்டார்கள். ஆனால் எளிய மக்களின் வழக்கில் இன்னும் தூய தமிழ்ச் சொற்கள் மாசடையாமல் உள்ளன. இலக்கணக் கட்டும் அவர்கள் பேச்சில் குலையாமல் காக்கப்படுவது சிறப்பு.

எழுதுவோர் 'நட்சத்திர அந்தஸ்து' 'ஸ்டார் ஓட்டல்' என்றெல்லாம் புறமொழி வெளிச்சத்தைக் கடன் வாங்கிப் பகட்டுகையில், நாட்டுப்புறத்து உழவர் வைகறையில் கண்விழித்து மலைமுகட்டை அண்ணாந்து,"எலேய் ரெட்டத் தொலக்கம் உச்சியில வந்துட்டுது பாரு.. எழுந்திருடேய்.." என்று கூக்குரலிடும் ஒலியில் மொழி தன்னொளி வீசிப் பொலிவதை உணர்கிறோம். தொலக்கம் - துலக்கம் = விண்மீன். தானே துலங்குவதால் துலக்கம்.

காலை அரும்பி உச்சிப்பொழுது சாய்ந்து மாலை வேளை. அதோ வயலில் வேலை முடிந்து இரண்டு பெண்கள் வீடு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். ஒருத்தியின் உடல் மொழியோடு இயைந்து குரல் மொழி உரத்து ஒலிக்கிறது. கேட்போம்.

"ஒனக்கென்ன.. ஒத்தாசைக்கு ஆளுண்டு. எனக்கு
அப்படியா... போய்த்தான் சோறு வடிக்கனும்...
மொள்தண்ணி வெக்கனும்.. ஒருத்தொருத்தருக்கும்
பணிக்கை பாக்கனும்..."

அவளுடைய "மொள் தண்ணியைச் 'சே' என்று எப்போதோ கவிழ்த்துக் கொட்டி விட்டோம். 30 வகை ரசம் செய்வது பற்றிய சமையற் குறிப்புகளோடு வார இதழ் வாங்கிச் சுவைக்கிறோம். ஆனால் அது ஆக்ஸ்போர்டு, வெப்ஸ்டர் போன்ற அகர முதலிகளிலும் கலைக்களஞ்சியங்கள் (Encyclophedia) பலவற்றிலும் Mulligatawny -யாகத் தமிழ் அடிப்படையிலான சொல் என்ற குறிப்போடும், Pepper Soup, Pepper Water என்னும் பொருள் விளக்கத்தோடும் இடம் பிடித்து மணக்கிறதே. இன்னும் விலையும் மதிப்பும் உயர்ந்த மேல்தட்டு உணவகங்களின் உணவுப்பட்டியல்களிலும் இதனைக் கண்டு உவக்கலாம். அங்கெல்லாமும் திருத்தமான 'மிளகுத் தண்ணீர்' என்று அல்ல, வயல் வேலைப் பெண்

வழங்குகிற 'முளகுத் தண்ணி' வடிவிலேயே (Mulliagatawny, Mulligatawny) தமிழ் வாழ்கிறது.

படிப்பறிவற்ற ஊர்ப்புறத்து மாந்தர் ஒருவரை நோக்கி அவரருகில் நிற்கும் சிறுவனைக் காட்டி "இவன் யார்? என்று வினவிப் பாருங்கள். 'எம்மவன் தானுங்க' என்று விடையிறுப்பார். உயர்திணையில் உறவு முறையைக் குறிப்பிடும் போது ஆறாம் வேற்றுமை உருபைத் தவிர்த்து, நான்காம் வேற்றுமை உருபான 'கு' வருதலும் (எனக்கு மகன்), வேற்றுமைத் தொகையாக (என் மகன்) உருபின்றி வருதலும் வேண்டும் என இலக்கணக்காரர்கள் விதித்ததை அவர் மீறவில்லை.

அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்
அதுவென் உருபுகெடக் குகரம் வருமே.

(தொல். சொல். 94)

ஆறாம் வேற்றுமைப் பொருண்மேல் வரும் உயர்திணைத்
தொகைக்கண் உருபு விரிப்புழி அது வென்னுமுருபு கெட
அதன் பொருட்கண் நான்காமுருபு வரும். ஈண்டு
அதுவெனுருபு கெடுதலாவது அவ்வுருபு ஆண்டு வாராமை.

(சேனாவரையம்)

ஆனால் உயரப் படித்தவர் கூட 'எனது மகன் குழந்தை வேலுவுக்கும்... மகள் பூங்குழலிக்கும் நடைபெறவுள்ள திருமணத்திற்குத் தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து...' என அச்சிட்டு அழைப்பு விடுக்கிறார். 'எனது மகன்' என்று ஆறாம் வேற்றுமை உருபைத் தவறாகப் பெய்து உறவை உடைமைப் பொருளாக்கும் பிழை எழுத்து மொழியில் உள்ளது. மக்களின் வழக்கு மொழியிலே இல்லை.

ஏற்பது இகழ்ச்சியன்று

இவ்வாறு மக்களின் பேச்சு மொழியைப் பொது எழுத்தில் ஏற்று வழங்க மறுப்பதன் விளைவு, அவ்வப்பகுதி வழக்காறுகள் வட்டார மொழிகளாகக் குறுகி

நாளடையில் கிளை மொழிகளாகப் பிரிந்து புது மொழிகளாக வடிவம் கொள்கின்றன. செந்தமிழ்ச் சொற்களோடு மலையாளம் தனிமொழியானது அண்மைச் சான்று. படிஞாயிற்றை அவர்களிடம் இழந்து, 'சூர்யாஸ்தமனம்' என்று எழுதித் தடுமாறுகிறோம். ஆங்கிலம், இந்தி போன்ற மொழிகளில் வல்லொற்றுகள் சொல்லிறுதியில் வருகின்றன.

(எ.டு) Thought Seek, ஹாத், சாத்

தமிழ் அப்படியில்லை. ஒலிப்பதற்கு எளிதாக அமைந்த மொழியாகையால், வல்லின மெய்கள் சொற்களின் ஈற்றில் அமையா. மெல்லின, இடையின மெய்யெழுத்துகள் இறுதியில் வரும்.

(எ.டு) பின்னல், பால், கோள், எண்ணம், அவர், தேன் மக்கள் பேச்சு நடையில் மெல்லின இடையின மெய்யிறுதியைக் கூட ஒலிப்பதில்லை. உகரம் சேர்த்து அவரு, பாலு, மோரு, தேனு என்றே பேசுகிறார்கள். எழுத்து நடைக்காரர்கள் இவற்றை ஏற்பதில்லை. என்ன விளைந்தது.? அண்டை மொழிகளில் அவை தக்க இடம் பிடித்துக்கொண்டன.

1. ஹாலு (பால்) – கன்னடம்

2. வாரு (அவர்), தேனு (தேன்), நீலு (நீர்) – தெலுங்கு குடும்ப மொழிகள் வளம் பெறட்டும். மகிழ்ச்சியே! நாம் தேக்கமடைய வேண்டாமே என்பதே மனக்குறை.

விரைந்து சிதைந்து உருமாறுவதைத் தடுக்க வரம்புகள் தேவையே. ஆயின், உயிர்த்திசுக்களின் நுண்ணறைகள் வளர்ந்து பிரிந்து பல்குவதைப் போல மொழி வளர்ச்சியடைவதற்கு வழி வாய்ப்புகள் அமைய வேண்டும். நமது இலக்கணக் கூறுகள் அவ்வாய்ப்புகளை அளிக்கின்றன. வழுவமைதி, புறனடை என்பன வெல்லாம் அடுத்த நிலைக்கு வழி காட்டும் வாயில்களே. மரூஉச் சொற்களும் போலிகளும் மக்கள் வழக்கை ஏற்றுக் கொண்ட மரபே. பழையன கழிக்கவும் புதியன ஏற்கவும் ஒரு மறுப்பும் விதிக்கப்படவில்லை. அப்படி ஏற்கப்பட்டதன் வெளிப்பாடே தொல்காப்பியத்துக்குப் பின்னர் வந்த

நன்னூல் இன்றளவில் புகுந்துள்ள மாற்றங்களைச் செப்பனிட்டு ஒரு புதிய இலக்கண நூல் தொகுக்கப்படுவதற்கான தரவுகள் மிகுதியாக உள்ளன.

மொழி தண்ணீர் போன்றது. பள்ளம் நோக்கி வெள்ளம் பாய்வதைப் போல மொழியும் எளிமை நோக்கி விரையும். ஓடையிலும் ஓடும்; வாய்க்காலிலும் பாயும்; ஆறுகளிலும் பெருகும்; புனல் ஏரி குளங்கள் அணைகளிலும் அடங்கும்; சின்னஞ்சிறு வழி கண்டாலும் உடைத்துப் பொங்கும்; கரை கடந்தும் புரளும். எல்லாம் அழகுதான் வெண்பாவும் வஞ்சியும் அழகுதான். உரைநடையும் அழகே. அவையே போல் மக்கள் வழக்கு பரந்து புரளும் புனல் போல் எழிலும் இனிமையும் நிறைந்ததே.

வேர் அறிந்து வேறு களைவோம்

சில ஆண்டுகளாகத் திரைப்படங்களுக்குத் தமிழ்ப் பெயரிட்டால் வரிவிலக்கு உண்டு என அறிவித்ததனால் நல்ல பெயர்களோடு படங்கள் வெளியாகின்றன. 'டவுன் பஸ்' என அப்போதே படம் வந்ததைக் கண்டு கொள்ளாமல் விட்ட நிலையில் அவ்வப்போது வேற்று மொழிப்பெயர்களில் படங்கள் திரையிடப்பட்டு வந்துள்ளன. எல்லை மீறிப் போய் 'ஹவுஸ்புல்,' 'ஜென்டில்மேன்,' 'குஷி,' 'தில்', எனப் பிறமொழித் தலைப்புகள் பெருகவே முறைப்படுத்துதல் தேவைப்பட்டு நற்பயன் விளைந்தது.

இந்நிலையில் 'ஒஸ்தி' என்றொரு படம் திரையிடப்பட்டுள்ளது. இதென்ன தலைப்பு? என்ன மொழி? தமிழுணர்வாளர்களுக்குக் குழப்பம். தமிழில் தலைப்பிட்டால் வரி விலக்கு என்ற ஆணை தளர்த்தப்பட்டு விட்டதா?

பெரிதும் திகைக்க வேண்டா. அது தமிழ் தான். 'உயர்' என்பது வேர்ச்சொல். நட, வா, மடி, சீ போல வினைப்பகுதி. இந்த வினையடியைக் கொண்டதே 'உயர்வு' என்னும் பெயர்ச்சொல். உயர்வு × தாழ்வு வகர உகர விகுதியன்றி, 'ச்சி' இறுதியேற்று இகழ்ச்சி, தேர்ச்சி என்றாற் போல உயர்ச்சி எனவும் வழங்கும்.

....குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் (பாப்பாப் பாட்டு)

என்றார் பாரதியார். பின்னர், உயர்த்தி × தாழ்த்தி என்னும் வழக்காறும் வந்தது. செட்டிச்சி, பார்ப்பாத்தி, இடைச்சி, குயத்தி எனச் சகர தகர உறழ்வில் பெயர்கள் விகுதியேற்பது இங்கு கருதத்தக்கது. இன்னும் ஒலிப்பு எளிமை விழைந்து மக்கள் வழக்கில் உகரம் ஒகரமாகவும், யகரம் சகரமாகவும் மாறுவது கண் கூடு.

(எ.டு)	உலகம்	ஒலகம்
	உரல்	ஒரலு
	பயல்கள்	பசங்க
	குயவன்	கொசவன்
	உயரம்	ஒசரம்

அப்படித்தான் 'உயர்த்தி' ஒசத்தி 'யாயிற்று. அதோடு நின்றிருந்தால் நன்று. உரைநடை எழுதுவோரும் 'ஒசத்தியை ஏற்று நிலைப்படுத்தியிருக்க வேண்டும். செய்யாததன் பயனாகப் பிறவெழுத்து (ஸ்) இடைநுழைய விட்ட விபத்து நேர்ந்து விட்டது. மொழிக்காப்பில் நெகிழ்வும் தேவை; விழிப்பும் வேண்டும்.

முடிப்பு

உழைக்கும் மக்களின் உடையில் கசங்கல் இருக்கலாம். தலை கலைந்திருக்கலாம். முகம் கருத்திருக்கலாம். ஆனால் அவர்களின் எண்ணம் செம்மையானது. சொல் தூய்மையானது. செயல் நேர்மையானது. அவை போலவே மக்கள் மொழியில் முனை மழுங்கல் இருக்கலாம். பகட்டின்றி மங்கலாய்த் தெரியலாம். புறத்தூய்மை குன்றந்து காணப்படலாம். ஆயின் அந்த எளிமையில் மொழியின் செழுமையும், கட்டுப்பாடு குலையாத தெளிவும், பண்பாடு வழுவாத அகத்தூய்மையும் கைவிடப்பட்டதில்லை.

எனவே இனியேனும் மக்களின் மொழி வழக்கை எள்ளிப் புறந்தள்ளாமல் அவற்றை ஏற்று வரம்பிட்டு வளப்படுத்துவோம். தமிழ் உயிர்ப்போடு எப்புலமும் தழைக்கட்டும்.

வாசகர் வாசகம் (1)

அன்புள்ள செந்தமிழ் ஆசிரியர்க்கு,

என் வணக்கம். நான் சென்ற மூன்று மாதங்களாக, 'செந்தமிழ் இதழ்' வாசித்து வருகிறேன். திசம்பர் 2011 இதழில் கட்டுரைகள் அனைத்துமே அருமை. புதுக்கவிதைகளில் பெண்ணுரிமையும் மீறலும், கூறியது கூறல், குறுந்தொகையில் ஒக்கூர் மாசாத்தியாரின் தலைவி கூற்றுப் பாடல்கள், உரைவேந்தரும் உரை மரபுகளும் ஆகியவை குறிப்பிடத் தக்கவைகளாகும்.

'குன்றக் குறவன்' எனத் தொடங்கும் ஐங்குறு நூற்றுப் பாடலில் 'செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே' என்ற அடியில் 'சுணங்கு' என்ற சொல்லுக்கு 'மார்பின்கண் பரந்து தோன்றும் தேமல்' என்கின்றார் உரைவேந்தர். மருத்துவ அளவில் சிந்திக்கும் போது 'தலைவனைப் பிரிந்த தலைவி சரியாக உண்ணாமல் சத்துக் குறைவாலும் (Nutritional deficiency), இரத்த சோகையாலும் (Anemia) அவள் முகத்திலும், உடல் தோலிலும் ஏற்படும் மாற்றமே 'சுணங்கு' எனக் கொள்ளலாம்.

'சுணங்கு' என்ற சொல் சிலப்பதிகாரம் புகார்க் காண்டம் 'கானல் வரி'யில் இடம் பெறுகிறது.

'நிறைமதி வாள் முகத்து நேர் கயல் கண் செய்த
உரை மலி உய்யா நோய் ஊர் சுணங்கு
மென் முலையே தீர்க்கும் போலும்'

என்பதிலிருந்து தேமல், நெஞ்சு மற்றும் மார்புப் பகுதியிலும் காணப்படும் என்பது தெளிவு.

இத்தேமல் Tinea (Ringworm) Versicolor என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு வகையான பாதிப்பாகக் கருதப்படுகிறது. இதை அழகுத் தேமல் என்று சொல்ல முடியாது. மருத்துவத்தின் வாயிலாகக் குணப்படுத்த முடியும்.

வ.க. கன்னியப்பன்
முன்னாள் கண் மருத்துவப் பேராசிரியர்
மஞ்சமலை, 8/2, திண்டுக்கல் மெயின் ரோடு
புதுவிளாங்குடி, மதுரை - 625 018
அலைபேசி : 98430 70840 மின்அஞ்சல் : doctorvkk@yahoo.com

வாசகர் வாசகம் ②

சீர்மிகு தமிழ்போற்றும் செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர்,

வணக்கம். செந்தமிழ் நவ. 2011 இதழில், உள்அட்டைப் படம், உள்படம், செய்திக்குறிப்பு, சங்கத்தின் பெருமைமிகு தமிழ்ப்பணிகளைக் கண்முன் நிறுத்தி, வாசகர் உள்ளத்தில் நன்றிப் பெருக்கையும், நல்வாழ்த்துக்களையும் தோற்றுவிக்கின்றன.

மூன்று கவிதைகளில், எளியேனின் இளவேனில் கவிதையையும், நிறுத்தக் குறியும் பிசகாமல் அச்சிட்டு மகிழ்ச்சியில் ஆழ்த்தியமைக்கு, மிகவும் நன்றி. கவிதைகளின் எண்ணிக்கை வளர்ச்சிக்கோட்டைத் தொடுகிறது!

7 கட்டுரைகளில், '....முசிறி' நிறைவுப் பகுதி, 'வாணியம்பாடி' மற்றும் 'கொச்சி' பற்றித்தரும் வரலாற்றுச் செய்திகள், இதுவரை எளியேன் அறியாத புதியன. '.....மகளிர் வாழ்வியல்', கட்டுரையாளர், தாலமியின் குறிப்புத் துணை கொண்டு, மதுரைவரையவனர் வணிகர் சென்று வர, கடற்கரையிலிருந்து நேர்வழித்தடம் அமைந்த நுட்பத்தை வெளிப்படுத்திய திறம் பாராட்டுக்குரியது! 'தமிழும் ஆங்கிலமும்....' கட்டுரையில், 'மொழி' சொல் விளக்கம் நன்று! '...மழபாடி...' ஆய்வுக் கட்டுரை, பெயர்க்காரணம், திருமழபாடி, பழைசையுள் மழபாடி ஆகியனவற்றைத் தெளிவுறக் காட்டுகிறது!

'செந்தமிழ்' வளர்க்கும் பெருந்தகையார் தம் ஆன்மிக விளக்கத் தொடர் கட்டுரையாகிய 'நால்வர் பெற்ற அருள்', சைவ நாயன்மார் அறுபத்து மூவருள், நால்வர் 'அருளாளர்' எனப்படும் காரணத்தை மிகவும் நுட்பமாகவும் மனம் கொள்ளுமாறும் எடுத்துரைக்கிறது!

ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 February 2012 MA/130/2011-2013

Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From

SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI M.A., M.Phil.** on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1,** and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI M.A., M.Phil.**